# <u>செயற்குழுக் கூட்டம் (17-02-2024)</u>

இன்று ( 17 பிப்ரவரி 2024) நமது இயக்க மாதாந்திர செயற்குழுக் கூட்டம் நமது தலைவர் தலைமையில் தலைமையகத்தில் நடைபெற்றது. பொது செயலாளர், ஐந்து செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் இரண்டு உறுப்பினர்கள் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டனர். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2024ம்ஆண்டு ஜனவரி மாத வரவு செலவு கணக்கு நிதிச் செயலாளரால் வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. இயக்கத்தின் நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதுமில்லையென அறிவிக்கப்பட்டது

3. நமது இயக்கத்தின் ஆயுள் உறுப்பினராக திரு ஐ ரியாஷ் அஹமதும் திருமதி எம் முத்தமிழ் செல்வியும் புதிதாக விண்ணப்பித்துள்ளனர். ஆண்டு உறுப்பினராக புதிதாக செல்வி பிரவீணா அவர்கள் விண்ணப்பித்துள்ளார். எல்லாவிண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆயுள்/ ஆண்டு உறுப்பினராகிறாரகள்.

4. அடையாள உறுப்பினர் அட்டைகள், உரிய நேரத்தில் அனுப்பப் படவில்லையென திருச்சி மாவட்ட நிதிச் செயலாளர் திரு அரங்க ராஜன் அவர்கள் கூட்டத்தில் முறையிட்டார். லேமினாஷன் கருவியைக் கொண்டு தானே அடையாள அட்டை தயாரித்துக் கொடுப்பதாகக் கேட்டுக் கொண்டார். அவருடைய வேண்டுகோளைப் பாராட்டி, அந்த சேவயை செயற்குழு ஏற்றுக் கொண்டது.

5. பள்ளிகளில் ஊழல் எதிர்ப்பு சொற்பொழிவுகள், இயக்கத்தின் புதிய கட்டடம், உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு தஞ்சாவூர்/ செங்கல்பட்டு மாவட்டங்கள் அமைத்தல், ஆகியவை பற்றி அடுத்த கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

6. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| ஒப்பம் | ஒப்பம் |
| **A** நஃபீஸ் அஹமத் | **வே கார்த்திகை ராஜன்** |
| **தலைவர்** | **பொது செயலாளர்** |